

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.2.2025) கஜகஸ்தான் நாட்டில் உலக வாள்வீச்சு கூட்டமைப்பு (FIE) நடத்தும் ஜூனியர் உலக கோப்பை வாள்வீச்சு போட்டியில் பங்கேற்க உள்ள தமிழ்நாடு வீரர் ப. அரவிந்தன் அவர்களுக்கு செலவின தொகையாக ரூ. 3.15 லட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. இரண்டாம் கட்டமாக கடலூர் கிழக்கு & கடலூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | கடலூர் மேற்கு | தொ.மு.ச. அலுவலகம், நெய்வேலி, கடலூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 01-02-2025



மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமையில் கும்முடிப்பூண்டி தொகுதி

# இளைஞர் அணி வாக்குச்சாவடி பாக முகவர்கள் - சமூக வலைதளப் பயிற்சி கூட்டம்!

## அப்துல்மாலிக் – பிரபு கஜேந்திரன் பங்கேற்பு!

திருவள்ளூர், பிப்.8-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. கும்முடிப் பூண்டி தொகுதி இளைஞர் அணி வாக்குச்சாவடி பாகமுகவர்கள் (BLA2) களப்பணி மற்றும் சமூக வலைதளப் பயிற்சி கூட்டம் இன்று (08.02.2025 சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் கவரைப் பேட்டை சத்தியவேடு சாலையில svk திருமண மண்டபத்தில் மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் தலைமையில நடைபெறுகிறது.

கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றியச்செயலாளர் கே.வி. ஆனந்தகுமார் மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ் வரவேற்புரையாற்றுகிறார். மாவட்ட நிர்வாகிகள் மு. பகலவன், ஜெ.மூர்த்தி, மு.கதிரவன், எம்.எல்.ரவி, கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எஸ்.ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.வெங்கடாசலபதி, பா.செ. குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, டாக்டர்.பரிமளம் விஸ்வ நாதன், கே.சுப்பிரமணி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜெ.மோகன்பாபு, டி.சங்கர், எம்.முரளிதரன், செ.யுவராஜ், இரா.கதிரவன் முன்னிலை வகிக்கின்றனர்.

'மாநில இளைஞரணி துணைச் செயலாளரும், மண்டல பொறுப்பாளர் அப்துல்மாலிக், பிரபுகஜேந்திரன் கூட்டத்தில் பங்கேற்று தேர்தல் களப்பணி மற்றும் சமூக வலைதளப் பயிற்சி அளிக்கிறார்கள். மாநில நிர்வாகிகள் சி.எச். சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதயசூரியன், ஏ.கே.சுரேஷ், செந்தமிழ் சசி, ஒன்றிய செயலாளர்கள் மு. மணிபாலன், டி.கே.சந்திரசேகர், ஆ.சத்தியவேல், ஜான்(எ) பொன்னுசாமி, ந.பரிமளம், பேரூர் செயலாளர்கள் இரா. அறிவழகன், அபிராமிகுமரவேல் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் கும்மு டிப் பூண்டி மேற்கு, கும்முடிப் பூண்டி தெற்கு, கும்முடிப் பூண்டி கிழக்கு, எல்லாபுரம் வடக்கு, எல்லாபுரம் தெற்கு, பூண்டி வடக்கு, பூண்டி கிழக்கு, கும்முடிப்பூண்டி பேரூர், ஊத்துக்கோட்டை பேரூர் கழகங்களின் இளைஞரணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கும்முடிப் பூண்டி தொகுதி வாக்குச்சாவடிகளின் பாகங்களின் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.

முடிவில் கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ப.சுரேஷ் நன்றியுரை கூறுகிறார்.

முதல்வர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# சென்னை தென் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ அறிவிப்பு!



சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 11.02.2025 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணியளவில் சர்.பிட்டி தியாகராயர் அரங்கில் மாவட்ட அவைத்தலைவர் அ.சந்திரசேகர் தலைமையில் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை, நந்தனம் மதி, எஸ்.முரளி, பகுதிச் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டச்செயலாளர்கள். வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் தவாறமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 01.03.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நிகழ்ச்சிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்து

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ.**
செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.



திருவெற்றியூர் ராஜாஜி நகர் அருகில் எந்த வித ஆவணமும் இல்லாமல் 20 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வரும் இருளர் இனத்தைச் சார்ந்த 17 குடும்பத்தினருக்கு சாதிச் சான்றிதழை திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவரணி துணை தலைவர் கே.பி.சங்கர் வழங்கினார் .

அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் – செங்கல்பட்டில்

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கண்டனப் பொதுக்கூட்டம்!

## தாம்பரம் மாநகரக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்க எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, பிப்.8-

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்த ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம். தாம்பரம் மாநகரக் கழகத்தினர் அணி அணியாய் திரள்வோம் என மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்று (8.2.2025 - சனிக்கிழமை) மாலை 5 மணி அளவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் செங்கல்பட்டில் நடைபெற உள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசுசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு என்ற பெயர் ஒரு வரி கூட சேர்க்கபடாமல். தமிழ் நாட்டை வஞ்சித்த ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் பேராசிரியர் இரா.தி.சபாபதி மோகன், தாயகம் பா.கவி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கண்டன உரையாற்ற உள்ளார்கள்.

மாவட்ட கழக நிர்வாகிகள், செங்கல்பட்டு நகர கழக செயலாளர், நகர மன்ற தலைவர் அவர்களின் முன்னிலையில் நடைபெறுகின்ற இந்த மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்திற்கு நமது தாம்பரம் மாநகர கழகத்தின் நிர்வாகிகள், மேயர், துணை மேயர், மண்டல குழு தலைவர்கள், பகுதி, வட்ட செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை செயற்குழு, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், இருபால் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாவட்ட கழகப் பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பெருங்கூட்டமாய் திரண்டு வாரீர் என மாநகரக் கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி கும்முடிப்பூண்டி ஒன்றியத்தில் உள்ள ஏ.என். குப்பம் வழுதலம்பேடு ஆகிய ஊராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு மின்கல வாகனங்களை மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி ஜெ கோவிந்தராஜன் வழங்கினார். உடன் எஸ்.ரமேஷ் இரா.அறிவழகன், எஸ்.ராமஜெயம், முபாஸ்கர் எம்.ஜெயசந்திரன், எம்.முரளிதரன் சுகு, விநாயகம் பழனி பிரபாகரன், அறிவழகன், இளவரசன், கே.வி நாகராஜ், க.பரத்குமார், சரவணன், கண்ணம்பாக்கம், பழனி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை கு. சுல்தான் மொய்தீன்

பிப்ரவரி 8 (2009)



**தி.மு.க. தலைமைப் பொதுக்குழு உறுப்பினராக நான்கு முறையும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராக ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.**

**மூன்று முறை தஞ்சை நகர்மன்ற உறுப்பினராகவும், மூன்று முறை நகரமன்றத் துணைத் தலைவராகவும் தொடர்ந்து தூய பணியாற்றியதன் பலனாக 2001ஆம் ஆண்டு நகர் மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தஞ்சை மக்கள் போற்றும் வண்ணம் பணியாற்றியவர்.**

**2001ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் இவரது மனிதநேயமிக்க தொண்டினைப் பாராட்டி முதல்வர் கலைஞர் அவர்கள் "கோட்டை அமீர்" விருது வழங்கினார்.**

**தலைமைக் கழகச் சார்பில் 2004ஆம் ஆண்டு "கலைஞர் விருதி"னை தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

மாதவரம் தெற்கு பகுதி 28வது வட்டத்தில் -

# மா.பொ.வேதா 43ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை! டி.ராமகிருஷ்ணன் – மிசா.பா.மதிவாணன் – கே.பி.சங்கர் வரவேற்பு!

சென்னை, பிப். 8-

மாதவரம் தெற்கு பகுதி தி.மு.க. மற்றும் தியாக தீபம் மா.பொ. வேதா நினைவு மன்றம் சார்பில் தியாக தீபம் மா.பொ. வேதா அவர்களின் 43 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அமைதிப் பேரணி இன்று (8.2.2025 - சனிக்கிழமை) காலை 8 மணி அளவில் அண்ணா சிலை, கணகன் சத்திரம் ஜி.என்.டி. ரோட்டில் இருந்து புறப்பட்டு அவரது நினை விடத்தில் மலர் அஞ்சலி செலுத்தப்படுகிறது.

நிகழ்ச்சிக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

சென்னை வடகிழக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் டி.ராமகிருஷ்ணன், மிசா.பா. மதிவாணன், கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., எஸ்.நந்தகோபால் எம்.சி., ஜி.துக்காரம், புழல் எம்.நாராயணன், எம்.பிரேம்குமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு வி.இராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு. ராஜேந்திரன், எம்.அறிவழகி, எம்.ஆனந்தன், தி.மு. தனியரசு எம்.சி., ஏ.வி.ஆறுமுகம் எம்.சி., வை.மா.அருள்தாசன், ஜி.தயாளன், மீ.வே.கர்ணாகரன், ஜி. ராஜேந்திரன், ச. அற்புதராஜ் வீ.கண்ணதாசன், வீ.கவி கணேசன், என்.பரந்தாமன், ஜெ. ஜெய் மதன், இரா. முருகேசன், டி.ஏ.ராஜி, பி.சாந்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர்கள்: மு.சிவகுமார், பி. தமிழரசன், கே.பி.சொக்கலிங்கம், டி.சி.வி.ராஜகுமாரி, உமா சரவணன், சரண்யா கலைவாணன், சுசிலா ராஜா, பானுமதி சந்தர், நந்தினி சண்முகம், ஜி. ராஜேந்திரன், கே.காசிநாதன், ஜெ.ஆஸ்னா மொர்ஷியா, ஏ.சந்திரன், எஸ். கனிமொழி சுரேஷ், டி.கார்த்திகேயன், ஜி.திருமலை துரைசாமி, எம்.குணசுந்தரி குட்டி மோகன்

28 வது வட்ட கழக நிர்வாகிகள்: சி.கே.கோபால், எஸ். எம்.பன்னீர்செல்வம், டி.ஆர். செங்குட்டுவன், எஸ்.எம். மோகன், டி.ஆர்.ரவிந்திரகுமார், ஏ.சசி குமார், யு.காந்திமதி உதயசூரியன், எஸ்.நிசார் அகமத், ஏ.ஜெயசெல்வி அசோக் குமார், கே.பி.உசேந்திரன், ஏ.முனுசாமி, சி.கே.ஜி. தர்மராஜ், டி.சந்திரன், மா.பொ.வே.ராஜா, டி.மதன், எஸ்.கரண்ராஜ், பி.காசிராஜன், ஆசைத்தம்பி,

பகுதி கழக நிர்வாகிகள்: புத்தகம் இ.ஏழுமலை, வி. எஸ்.ஆர்.ஜெயக்குமார், இ. மோகன், ஆ.விஜயலட்சுமி ஆனந்தன், மாவட்ட பிரதிநிதிகள்: எம்.பி.நடராஜன், ஆர்.ஞானசேகர், ஏ.சந்திரன், டி.எஸ்.இளங்கோவன், கே. ரமணன், ச.மணி கண்டன், எம்.செல்வம், இ.ராஜேஷ்குமார், எஸ்.சண்முகம், ஜி.தேவி கௌதமன், கே.பாண்டியன், கோட்டை மோசஸ்,

வடக்கு பகுதிக் கழக நிர்வாகிகள் ஏ.திராவிட வீரன், க.சிவசங்கரன், ஆ.ராஜேந்திரன், எஸ்.கௌரி, ஆர்.முரளி, மாவட்ட பிரதிநிதிகள் பி. தரணி, கே.காசிநாதன், பி.நிர்மல் குமார், கு.செல்வம், நா.மோகன் குமார், வி.கார்த்திகேயன், பி.சந்திரன், கே.ஜிம் ராஜா, நிகழ்ச்சி தூண் அமைப்பு நிர்வாகிகள்:டி.ராமகிருஷ்ணன், எஸ்.எம்.மோகன், எஸ்.எம்.பன்னீர்செல்வம், கே.அன்பு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துகின்றனர்

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை 28 வது வட்டக் கழகம் மற்றும் தியாக தீபம் மா. பொ.வேதா நினைவு மன்றம் செய்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. இராசாராம்

பிப்ரவரி 8 (2008)



**சேலம் மாவட்டத்தில் தொடக்கக் காலத்தில் கழகத்தை வளர்க்க அரும்பாடுபட்டவர்.**

**திராவிட இயக்க மூத்த முன்னோடிகளில் ஒருவராகவும் – தந்தை பெரியார் அவர்களின் அணுக்கத் தொண்டர்களில் ஒருவராகவும் விளங்கினார்.**

**இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், தலைவர் கலைஞர் அமைச்சரவையில் 1971ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை அமைச்சராகப் பணியாற்றியவர்.**

**1980 முதல் 1984 வரை தமிழக சட்டமன்ற பேரவையின் தலைவராகவும் பணியாற்றினார்.**

**பேறிஞர் அண்ணா அவர்கள் சிகிச்சைக்காக வெளிநாடு சென்றபோது இவரும் உடன் சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**